சங்க இலக்கிய உடன்போக்குப் பாடல்களில் பெண்களின் உளச்சிக்கல்கள்

முனைவர் பொ. பார்த்தீபன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, திருநெல்வேலி

முன்னுரை

சங்க இலக்கியத்தில் சான்றோர்கள் அகத்தையும் புறத்தையும் பாடுபொருளாக்கியுள்ளன. அகப்பொருளின் பிரிவுகளான களவு, கற்பில் களவொழுக்கத்தின் இறுதிப் பகுதியாக விளங்குவது உடன்போக்காகும். தமிழின் தொன்மையான இலக்கியமாகக் கருதப்படுவது பாட்டு என்றும் தொகை என்றும் இரண்டாக வகைப்படுத்தப்பட்ட சங்க இலக்கியங்களாகும். பழந்தமிழரின் வாழ்க்கை முறையை இக்காலத்தவாக்கு விளக்கி நிற்பதாக விளங்குவது இவ்விலக்கியம் ஆகும். தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப் பாடு, பாங்கற் கூட்டம், பரங்கியற் கூட்டம், குறியிடம் சிறைப்புறம், வரைதல், வேட்கை, வரைவிடைப் பிரிவு, வரைவுகடாதல், வரைவு மலிவு போன்ற சூழல்களில் குறிப்பிட்ட நிகழ்வுகள் நடைபெற்ற பின்னர் தோழி தலைவனைப் பற்றி செவிலியிடம் எடுத்துக் கூறி அறத்தொடு நின்று மணம் புரிவிப்பது நிகழும். அதற்குச் செவிலி ஒப்புக் கொள்ளாத நிலையில் தலைவனும் தலைவியும் உடன் போக்குச் செல்வர். அறத்தொடு நிற்றலை ஏற்காத நிலையில் களவின் இறுதி நிலையாக உடன்போக்கு விளங்கும். இவ்வாறு நிகழும் உடன்போக்குப் பாடல்களில் தலைவனை விட தலைவியையும் அவளைச் சுற்றியுள்ள பாத்திரங்களின் மனப்போக்கும் சிக்கல்களும் மீண்டும் மீண்டும் பேசப்படுகின்றன. தலைவியைச் சுற்றியுள்ள தோழி, செவிலி, நற்றாய் உள்ளிட்ட பெண் பாத்திரங்கள் இந்த உடன்போக்கில் கொள்ளும் மனப்போராட்டங்களும் உளச்சிக்கல்களும் பெரும்பாலும் பெண்களின் அன்றைய சமூக இருப்பைக் காட்டுவதாக உள்ளன. இக்கட்டுரையின் வாயிலாக இச்சிக்கல்களை ஆராயலாம்.

தொல்காப்பியம் கூறும் உடன்போக்கு இலக்கணம்

தமிழில் உள்ள இலக்கண நூல்களுள் காலத்தால் பழமை வாய்ந்த நூல் தொல்காப்பியம் ஆகும். பழந்தமிழரின் அகவாழ்க்கை, புறவாழ்க்கைக்கான இலக்கணம் கூறும் தொல்காப்பியம் பழந்தமிழரின் வாழ்வியலை அறியப்பெரிதும் உதவி புரிகின்றது. அப்பொருள் புறப்பொருள் என இருவகைப்படும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் அகமானது களவு, கற்பு என இருவகைப்படும். களவு எனப்படுவது தலைவனும் தலைவியும் பிறாறியாமல் தம்முள் இன்பம் துய்த்தலாகும். இக்களவிற் கூட்டத்தை,

> ***"காமப்புணர்ச்சியும் இடந்தலைப்படலும்***
> ***பாங்கொடு தழாஅலும் தோழியிற் புணர்வுமென்று***
> ***ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு***
> ***மறையென மொழிதல் மறையோர் ஆறே"***
> ***(தொல்.பொருள்.நூற்.487)***

என்று தொல்காப்பியம் வகைப்படுத்துகிறது.

அதாவது களவினை இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், தோழியற்கூட்டம் என நான்கு வகையாகத் தொல்காப்பியம் கூறுகிறது. இவற்றில் தோழியிற் கூட்டத்துள் முன்னுற உணர்தல், குறையுற உணர்தல், குறை நயப்பித்தல், குறைமறுப்பு, சேட்படை, குறியிடம், சிறைப்புறம், வரைதல் வேட்கை, வரைவுகடாதல், வரைவிடைப் பிரிவு, வரைவு

மலிவு, அறத்தொடு நிற்றல், உடன்போக்கு போன்றவை அடங்கும்.

உடன்போக்கு பற்றி உரையாசிரியர்கள் கருத்து

தொல்காப்பியர் உடன்போக்குப் பற்றி கூறுமிடத்து,

"கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவண்
இரங்கலும் உண்டென மொழிப ஓரிடத் தான"
(தொல்.பொருள்.இளம். நூற்.17)

என்பார். இதற்கு உரையாசிரியர்கள் உரை கூறுமிடத்துக் கொண்டு தலைக்கழிதலை உடன்போக்கு என்பதைச் சுட்ட பயன்படுத்தியுள்ளமை நமக்குப் புலனாகிறது.

"கொண்டு தலைக்கழிதலும், பிரிந்து அவண் இரங்கலும் உண்டு. கொண்டுதலைக் கழிதலும் உண்டு. பிரிந்து அவண் இரங்கலும் உண்டு. ஓர் இடத்தான் என மொழிப - ஒரோ இடத்துக்கண் என்று கூறுப என்றும் கொண்டு தலைக்கழிதலானது உடன் கொண்டு பெயர்தல்" (தொல்.பொருள்.இளம். நூற்.16.) என்று இளம்பூரணர் உரை கூறுகிறார்.

"கொண்டுதலைக் கழியினும் தலைவன் தலைவியை உடன்கொண்டு அவள் தமரிடத்து நின்று பிரியனும், பிரிந்து அவண் இரங்கினும் தலைவன் உடன்கொண்டு போகாது தானே போதலில் தலைவி மனையின் கண் இருந்து இரங்கினும் ஓரிடத்தான - இவ்விரண்டும் ஓரிடத்தின் கண்ணே ஒரொழுக்கமாயின உண்டென மொழிப - இவ்வொழுக்கந்தான் நான்கு வருணத்திலும் வேளாண் வருணத்திற்கு உண்டென்று சொல்லுவார் ஆசிரியர்" (தொல்.பொருள். இளம். நூற்.41) என்பார் நச்சினார்க்கினியர்.

உடன்போக்கில் தலைவி

தலைவனோடு உடன்போக்குச் சென்ற தலைவி மணம் முடித்துக் கொண்டு தலைவனோடு கற்பொழுக்கம் காத்து வீட்டில் இருக்கும் நிலையில் முன்னர் காலை நிலத்து வழியில் சென்ற போது அங்கு கண்ட பறவை, விலங்கு அவற்றின் இயல்புகள் குறித்து அன்பு கொள்ளத்தக்க வகையில் சொல்லுதல், தனிவழி சென்று தொழில் செய்யும் தலைவனுக்குப் பறவை, விலங்கால் என்ன துன்பம் வருமோ என்பதாக அச்சம் கொள்வது உண்டு என்பதைத் தொல்காப்பியர்,

"புணர்ந்து உடன்போகிய கிழவோள்
மனை இருந்து இடைச் சுரத்து இறைச்சியும்
வினையும் சுட்டி அன்புறு தக்க கிளத்தல் தானே
கிழவோன் செய் வினைக்கு அச்சம் ஆகும்"
(தொல்.பொருள்.கள. நூற்.1094.)

என்ற நூற்பாவில் கூறுகிறார்.

உயிரை விட பெண்மையின் அறம் காக்கும் நாணம் சிறந்தது. இந்த நாணத்தை விட சிறந்தது கற்பு என்பதை மனத்தில் நிறுத்தி தலைவன் இருக்கும் இடந்தேடி தலைவி தானே செல்லுதலும், மனவருத்தம் வாராத சொற்களைத் தலைவி பேசுதலும் இது போன்ற பிறவும் தலைவி கூற்றாக அமைதலும் உண்டு என்பதை,

"உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக்/ கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே."
(தொல்.பொருள்.கள. நூற்.1057)

என்று இந்நூற்பாவில் தொல்காப்பியர் கூறுகிறார். உடன்போக்கிற்கு அடிப்படை காதல் ஆகும். இக்காதல் வருமிடத்து தலைவியின் கூற்றமையும் இடங்கள் சுட்டத்தக்கன.

காதல் வயப்பட்டு நிற்கும் பெண்மைக்கு உரிய நாணமும் மடமும் தலைவியின் கண்ணின் வழி வெளிப்படுவதால், குறிப்பாலும் சூழ்நிலையாலும் உணர்த்துவாளே அன்றி நேரடியாகத் தன்மட விருப்பத்தைத் தலைவி தெரிவிப்பது இல்லை என்பதை,

"காமத் திணையில் கண்ணின்று வருஉம்
நாணும் மடனும் பெண்மைய ஆதலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்ப வாரா அவள் வயினான"
(தொல்.பொருள்.கள. நூற்.1054)

என்ற தொல்காப்பிய நூற்பா கூறுகிறது. இதில் காதலுணர்வே அடிப்படையாகிறது.

இதைத் திருவள்ளுவரும்,

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனும் இல"

(குறள்.1100)

எனத் திருக்குறளில் கூறுவதைப் போல காதலை வெளிப்படுத்தாத கண்கள் உலகில் எவருக்கும் இல்லை. எனவே தான் பெருமை பொருந்திய நாணமும் மடனும் கண்வழி வெளிப்பட்டுக் காதலின்பத்திற்கு ஏற்றதாக இருக்கிறது என்கிறார் தொல்காப்பியர்.

"காமம் சொல்லா நாட்டம் இன்மையின்
ஏமுற இரண்டும் உளஎன மொழிப"

(தொல்.பொருள்.நூற்.1055)

என்னும் நூற்பாவில் கூறுகிறார்.

உடன்போக்கை மறுத்தல்

உடன் போக்கினை வலியுறுத்தும் தோழியிடம் தலைவி உடன்போக்கினை மறுக்கிறாள். அதற்கானக் காரணம் தன் தாயை எண்ணியதாக இருக்கிறது. தலைவி தோழியிடம், பல சுரங்களையும் கடந்து சென்ற தலைவர் பொருட்டுத் தலைவியர் இரங்குதல் இயல்பென்று எண்ணாமல் அவர் தூற்றுதலை விரும்புபவராகிய இவ்வூரிலுள்ள பெண்டிர் கூறுகின்ற இன்னாத சொற்கள் என் மகளுக்குப் பொருந்துவன அல்ல என தெய்வத்திடம் வேண்டி நமது களவொழுக்கத்தினை உணர்ந்து வைத்து அமைதியாக இருக்கும் நம் அன்னை முன்னர் உடன்போக்கினை மேற்கொள்வது எவ்வாறு இயலும்? என்று கூறுகிறாள். இவ்வாறு தோழியிடம் உடன்போக்கை மறுத்துக் கூறும் அமைப்பில் இடம்பெற்ற பாடல் ஒன்று அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது. இப்பாடலை ஓரோடகத்துக் கந்தரத்தனார் இயற்றியுள்ளார்.

"..................

சுரம்பல கடந்தோர்க்கு இரங்குப என்னார்
கௌவை மேவலர் ஆகி இவ்ஊர்
நிரையப் பெண்டிர் இன்னா கூறுவ
புரைய அல்ல என்மகட்கு எனப்பரை,
நம் உணர்ந்து ஆறிய கொள்கை
அன்னை முன்னர்யாம் என் இதற் படலே?"

(அகம்.95)

ஊர்மக்கள்பழிதூற்றியபோது, ஊர்மக்கள் பழி தூற்றியது உண்மையாகி விடக்கூடாதே என எண்ணிய தாய் தெய்வத்தைப் போற்றிய அளவில் என் களவொழுக்கத்தை உணர்ந்து என்னை வீட்டுக்காவலில் வைத்த தாயின் கண்பார்வைக்கு முன் களவொழுக்கத்தை மேலும் தொடர்தல் எவ்வாறு இயலும் எனத் தலைவி கூறுகிறாள். இதில் தொல்காப்பியரின், தலைவிக்கான இலக்கணம் வெளிப்படுகிறது. அதாவது தாயின் பாசம் உடன்போக்கை மறுக்கச் செய்கிறது.

தாயும் உடன்போக்கும்

நற்றாய் செவிலித்தாய் இருவரும் தலைவியின் இல்லற வாழ்க்கையின் பெரிதும் அக்கறை கொண்டவர்கள். எனவே தலைவியானவள் தம் காதலை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என அஞ்சி தலைவனோடு உடன்போக்கு மேற்கொள்ளும் வழக்கம் பண்டைய தமிழகத்தில் இருந்து வந்துள்ளது. தாயின் கொடுமையை ஏற்க இயலாத நிலையிலும் தலைவி உடன்போக்கு மேற்கொள்கிறாள். தலைவியின் உடன் போக்கிற்குத் தாயிடம் கொண்ட அச்சமே காரணமாக சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஊரில் அலது எழுந்ததும் தலைவியைத் தாய் இற்செறிக்கிறாள். தாயின் கண்டிப்புக்குக் காரணம் அன்பு, அக்கறை என்பதை உணராத தலைவி உடன்போக்கு மேற்கொள்கிறாள்.

"அன்னை அரியின் இவணுறை வாழ்க்கை
எனக்கு எளிதாகல் இல" **(அகம்.203)**

என்ற அகநானூற்றுப்பாடல்வரிகள் தாயின் கண்டிப்பை உணர்த்துகின்றன. எனவே மகளின் களவு ஒழுக்கத்தில் தாய் காட்டும் கண்டிப்பை விரும்பாத நிலையில் உடன்போக்கு நிகழ்கிறது. இங்கு தாயின் கண்டிப்பே உடன்போக்கிற்கு அடிப்படையாகிறது.

தலைமகளைத் தலைமகன் கொண்டு கழிந்த கொடுமையை நினைத்து துயருற்றுப் போகிறது நற்றாயின் உள்ளம். தன்னைப்

போலவே தலைவனை ப் பெற்றத் தாயும் தீராத துன்பத்தினை அடைய வேண்டும் என்று நினைக்கிறாள் என்பதாக அமைந்த பாடலொன்று ஐங்குறுநூற்றில் அமைந்துள்ளது.

நற்றாய்

நற்றாய் தன் மகள் தன்னை விட்டுப் பிரிந்ததால் உள்ளம் மெலிந்து துயிலாமல் புலம்புகிறாள். தான் உயிரோடு இருப்பதை எண்ணி வருந்துகிறாள். தலைவனுடன் என் மகள் உடன்போனதற்கு நான் வருந்தவில்லை. நான் அவளைப் பிரிந்து உள்ளம் மெலிந்து துயிலாமல் புலம்ப, என்னை விட்டு என் உயிர் போகாமல் நான் உயிரோடு இருப்பதை எண்ணி வருந்துகிறேன் எனக் கூறும்,

"காய்ந்துசெலற் கனலி கல்பகத் தெறுதலின்"

(அகம்.55)

என்ற பாடல் மாமூலனாரால் இயற்றப்பட்டு அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது. உடன் போக்குச் சென்ற தலைவி குறித்து அலர் எழுந்தமையால் நற்றாய் உடன்போக்குச் செல்லுமுன் என் உயிரைக் கூற்றுவன் எடுக்காமல் அவளைத் தேடிச் செல்ல வைத்து விட்டானே என வருந்தும் போது அவள் இவ்வாறு புலம்புகிறாள். இது அவள் கொண்ட உளவியல் சிக்கல்களை வெளிப்படுத்துகிறது.

செவிலி

தலைமகள், தலைமகளோடு வீட்டைவிட்டு வெளியேறிப் போய்விட்டாள். அவளைப் பேணி வளர்த்த செவிலித்தாயின் நெஞ்சம் அந்தப் பிரிவைத் தாங்காமல் துயரப்பட்டு வாடி நலிகின்றது. தானும் அதனால் பெருந்துயருற்றுக் கலங்கியவளான போதும் தலைமகளைப் பெற்ற தாய் தன் தோழியானச் செவிலியின் பெருந்துயரைக் கண்டு அவளைத் தேற்றுவதாக அமைந்த செய்யுள் ஒன்று ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ளது.

"தெறுவது அம்ம நும்மகள் விருப்பே
உறுதுயர் அவலமோ டுயிர்செலச் சாஅய்ப்"

(ஐங்.313)

இருவர் நாட்டினிடையேயுள்ள காட்டை நம் அன்பிற்குரியவளான அவள் கடந்து சென்றாள். நும் மகளின் காதலாகிய அவ்விருப்பமானது நமக்கெல்லாம் துன்பம் தருவதே. நீயும் தலைவி பிரிந்த துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு தான் ஆக வேண்டும். வருந்தி நலியாதே என நற்றாய் கூறுவதாய் உள்ளது. தாய்மையின் உள்ளத்தை, உள்ளத்தின் தவிப்பை உணரச் செய்வதாக இப்பாடல் அமைகிறது.

தோழி

தமிழின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்கும் பாட்டும் தொகையுமாகிய சங்க இலக்கியத்தின் காதல் பாடல்கள் அனைத்தும் அகப்பாடல் எனப்படுகின்றது. இவ்வகைப் பாடல் நாடக வழக்காலும் உலகியல் வழக்காலும் இயன்ற புலனெறிப் பாடல்கள் ஆகும். அகப்பாடல்கள் திணைப்புலத்தில் கூற்று அடிப்படையில் அமைந்தவை. அகப்பாடல் மாந்தர்களுள் கூற்றிற்கு உரியவர்களில் தலைவன், தலைவி ஆகியோருக்கு அடுத்த முதன்மை மாந்தராகத் திகழ்பவன் தோழி. தலைவன் தலைவி இடையேயுள்ள அன்பினைப் புரிந்து கொண்டு அவ்வன்பிற்குத் தடை ஏற்படுகின்ற போது தன்னுடைய சொல்லாடல் திறத்தாலும், மதி நுட்பத்தாலும் களவைக் கற்பாக்கிக் காட்டும் வன்மை பொருந்தியவளாகத் தோழி விளங்குவாள்.

துணைப்பாத்திரம் இன்றேல் தலைமைப் பாத்திரம் சிறப்புறாது. சங்க இலக்கியத்தில் வரும் துணைப்பாத்திரங்களில் தோழியே தலைமைத் தாங்கும் தகுதியடையவள். அவள் இல்லை என்றால் தலைவனும், தலைவியும் கூட ஒளி பெற முடியாது என்கிறார் சரளா இராசகோபாலன்.

தோழி தலைவனிடம், உடன்போக்குச் செல்லும் வழி கொடியதாக இருக்கும் எனக் கூறி தலைவியை வரவேண்டாம் என்கிறாய். அப்படியாயின் தலைவிக்கு நீயில்லாமல் இருக்கும் மனை மட்டும் இன்பம் தருமோ

என்று கேட்கிறாள்.

"உமணர் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்தலை
ஊழ்பாழ்த்தன்ன ஓமைஅம் பெருங்காடு
இன்னா என்றீர் ஆயின்
இனியவோ பெரும தமியோர்க்கு மனையே?"
(குறுந்.124)

தலைவனே! நீ பெரிய பாலை நிலங்கள் இன்னாமையுடையனஎன்றுகூறிதலைவியை விடுத்துத் தனியே செல்லக் கருதினால் தலைவனைப் பிரிந்த தனிமையையுடைய மகளிருக்கு வீடு மட்டும் இனிமை தருமோ? எனக் கேட்கிறாள். இப்பாடலில் அன்றைய பெண்கள் ஆண்களைச் சார்ந்து வாழ வேண்டிய சூழல் இருந்ததை தோழி வெளிப்படுத்துகிறாள். பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் இதிலிருந்தே தொடங்குவதைத் தோழிக்கூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இதைப்போன்று பல இடங்களை உதாரணமாக கூறலாம்.

முடிவுரை

சங்க இலக்கிய உடன்போக்குப்பாடல்கள் குறிப்பிட்ட நில வெளிக்குள் வாழ்ந்த சங்க காலப் பெண்களின் அகவாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்தும் கண்ணாடிகளாக அமைந்துள்ளன. பெண்கள் சமூகத்தோடும் உறவுகளோடும் கொண்டிருந்த அக எல்லைகளை மிக யதார்த்தமாகப் பதிவு செய்கின்றன. குறிப்பாக, பெண்களின் உறவுச்சிக்கல்களை, ஆண்களைச் சார்ந்து (தலைவன்) வாழ வேண்டிய சமூக நிர்பந்தங்களை, மனப்போராட்டங்களை அவலச்சுவையோடு உடன்போக்குப் பாடல்கள் பேசுகின்றன. இதன்மூலம் பெண்களுக்கான சமூக இருப்பையும் வரையறைகளையும் அன்றைய புறச் சூழல்களோடு அறிந்து கொள்ள உடன் போக்கு குறித்த சங்கப்பாடல்கள் உதவுகின்றன.

துணைநூற்பட்டியல்

1. குழந்தை, புலவர், தொல்காப்பியம் பொருளதிகாரம், அர்ஜித் பதிப்பகம், கணபதி நகர், நாகர்கோவில் - 629 002, முதல்பதிப்பு - 2012.
2. சுப்பிரமணியன், ச.வே., தொல்காப்பியம் இளம்பூரணர் உரை (எழுத்து - சொல் - பொருள்), மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001, முதல்பதிப்பு - - 2013.
3. சுப்புரெட்டியார், நா., அகத்திணைக் கொள்கைகள், பாரிநிலையம், சென்னை - 1, முதப்பதிப்பு -1981.
4. சரளா இராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ஒளிப்பதிப்பகம், சென்னை, 1986.